## ஜூன் – 19

**"நீதிமானுக்காக வெளிச்சமும் (சத்தியமும்) செம்மையான இருதயத்தாருக்காக மகிழ்ச்சியும் (சத்தியத்தின் சந்தோஷமும்) விதைக்கப்பட்டிருக்கிறது." - சங் 97 : 11.**

தேவனுடைய உண்மையான பிள்ளைகள் சத்தியத்தை நேசிக்கிறார்கள். ஏனென்றால், அதற்காக அவர்களிடத்தில் ஒரு குண ஒற்றுமை இருக்கிறது. அவர்கள் சத்தியத்தைக் காணும்போது, அதன் மதிப்பைக் கண்டு கொள்ளுகிறார்கள். அவர்கள் அதை உயர்வாக மதித்து, அதில் தியானமாயிருக்கிறார்கள். இது தேவனைப்போலவே இருக்கிறது. இது அவருடைய மகிமையான தயவின் வெளிப்படுத்தலும், அவருடைய அன்புள்ள, இரக்கமுள்ள, ஞானமுள்ள, நீதியுள்ள குணத்தின் பிரதிபிம்பமாயிருக்கிறது என்று அவர்கள் சொல்லுகிறார்கள். ஆகையால் அவர்கள் சத்தியத்தையும் அதைத் தந்த தேவனையும் நேசிக்கிறார்கள். அதை அவர்கள் தங்களுடைய இருதயங்களில் சேமித்து வைத்து, அதைத் திரும்பத்திரும்பக் கவனமாகப் படிக்கிறார்கள். அவர்கள் அதை ஆராய்ந்து அதனுடைய எல்லாப் பாகங்களின் பொருத்தத்தையும், அழகையும் கண்டு ஆச்சரியப்படும்போது, அவர்கள் தங்களுடைய சொந்தக் குணங்களை அதே அழகின் நிலைக்கு ஒவ்வச்செய்ய அவர்கள் அதிகதிகமாகக் கஷ்டப்பட்டு முயற்சி செய்யவும், மற்றவர்களும் அதைப்பெற்று, அதனால் ஆசிர்வதிக்கப்பட வேண்டுமென்பதற்காகத் தங்களுடைய வார்த்தையினாலும், நடத்தையினாலும், அவர்களுக்கு சிபாரிசு செய்யவும் நாடுகிறார்கள். **- Z '96, 55 (R 1949).**

இயற்கையான வெளிச்சம் இயற்கையான கண்களுக்குப் பாதையை தெளிவாக்குகிறது போல, சத்தியம் நம்முடைய அறிவின் கண்களுக்குப் பாதையைத் தெளிவாக்குகிறது. யாருடைய இருதயம் நீதியுள்ள தத்துவங்களுக்கு அனுதாபமுள்ளதாய் இருக்கிறதோ, அப்படிப்பட்டவர்களுடைய அறிவின் கண்களை மாத்திரம் திறப்பது தேவனுடைய முன்னேற்பாடாயிருக்கிறது. மற்றவர்களுக்கு சத்தியம் கெடுதியை உண்டு பண்ணும். சத்தியம் நீதிமான்களுக்கு ஆசிர்வாதமாயிருக்கிறது. அதன் மூலமாக அவர்கள் ஆசிர்வாதமாயிருக்கிறார்கள். ஆகையால் அதன் ஆசீர்வாதங்கள் அவர்களுடைய இருதயங்களை சந்தோஷத்தினால் நிரப்புகின்றன. **-P '30, 78.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

தானி 2:28; ஆமோ 3:7; ரோம 16:25,26; யோவா 15:15; சங் 29:9,11; நீதி 3:32; மத் 11:25; 24:45-47; லூக் 8:10; 12:42-44; வெளி 19:9,10; 22:8,9,16.

**கோபுர வாசிப்பு : Z '09, 231 (R 4444)**

**வினாக்கள் :** சத்தியத்தைப் பெற்றுக்கொள்ள நான் நிறைவேற்றிய நிபந்தனைகள் எவை? அதில் உதவியாக அல்லது இடையூறாக இருந்தவை எவை?